ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ புள்ளுருவாகி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ புள்ளுருவாகி ॥

பழமொழியாற் பணிந்துரைத்த பாட்டு

‡புள்ளுருவாகி நள்ளிருள் வந்த⋆
பூதனை மாள⋆ இலங்கை
ஒள்ளெரி மண்டி உண்ணப் பணித்த⋆
ஊக்கம் அதனை நினைந்தோ⋆
கள்ளவிழ் கோதை காதலும்⋆ எங்கள்
காரிகை மாதர் கருத்தும்⋆
பிள்ளை தன் கையில் கிண்ணமே ஒக்கப்⋆
பேசுவதெந்தை பிரானே! (1)

மன்றில் மலிந்து கூத்து வந்தாடி⋆
மால் விடை ஏழும் அடர்த்து⋆ ஆயர்
அன்று நடுங்க ஆனிரை காத்த⋆
ஆண்மை கொலோ அறியேன் நான்⋆
நின்ற பிரானே! நீள் கடல் வண்ணா!⋆
நீ இவள் தன்னை நின் கோயில்⋆
முன்றில் எழுந்த முருங்கையில் தேனா⋆
முன் கை வளை கவர்ந்தாயே (2)

ஆர் மலி யாழி சங்கொடு பற்றி⋆
ஆற்றலை ஆற்றல் மிகுத்துக்⋆
கார் முகில் வண்ணா! கஞ்சனை முன்னம்⋆
கடந்த நின் கடுந்திறல் தானோ⋆
நேரிழை மாதை நித்திலத் தொத்தை⋆
நெடுங்கடல் அமுதனையாளை⋆
ஆரெழில் வண்ணா! அங்கையில் வட்டாம்⋆
இவள் எனக் கருதுகின்றாயே (3)

www.prapatti.com

மல்கிய தோளும் மான் உரியதளும்⋆
உடையவர் தமக்குமோர் பாகம்⋆
நல்கிய நலமோ நரகனைத் தொலைத்த⋆
கரதலத்தமைதியின் கருத்தோ⋆
அல்லியங்கோதை அணி நிறம் கொண்டு
வந்து⋆ முன்னே நின்று போகாய்⋆
சொல்லியென் நம்பீ! இவளை நீ உங்கள்⋆
தொண்டர் கைத் தண்டென்றவாறே (4)

செருவழியாத மன்னர்கள் மாளத்⋆
தேர் வலங்கொண்டவர் செல்லும்⋆
அருவழி வானம் அதர் படக் கண்ட⋆
ஆண்மை கொலோ அறியேன் நான்⋆
திருமொழி எங்கள் தேமலர்க் கோதை⋆
சீர்மையை நினைந்திலை அந்தோ⋆
பெரு வழி நாவற் கனியினும் எளியள்⋆
இவள் எனப் பேசுகின்றாயே (5)

அரக்கியர் ஆகம் புல்லென வில்லால்⋆
அணி மதிள் இலங்கையார் கோனைச்⋆
செருக்கழித்தமரர் பணிய முன்னின்ற⋆
சேவகமோ செய்ததின்று⋆
முருக்கிதழ் வாய்ச்சி முன் கை வெண் சங்கம்
கொண்டு⋆ முன்னே நின்று போகாய்⋆
எருக்கிலைக்காக எறி மழுவோச்சல்⋆
என் செய்வதெந்தை பிரானே! (6)

ஆழியந் திண் தேர் அரசர் வந்திறைஞ்ச⋆
அலை கடல் உலகம் முன் ஆண்ட⋆
பாழியந் தோள் ஓர் ஆயிரம் வீழப்⋆
படை மழுப் பற்றிய வலியோ⋆
மாழைமென் நோக்கி மணி நிறம் கொண்டு
வந்து⋆ முன்னே நின்று போகாய்⋆

www.prapatti.com

கோழிவெண் முட்டைக்கென் செய்வதெந்தாய்!⋆
    குறுந்தடி நெடுங்கடல் வண்ணா! (7)

பொருந்தலன் ஆகம் புள்ளுவந்தேற⋆
    வள்ளுகிரால் பிளந்து⋆ அன்று
பெருந் தகைக்கிரங்கி வாலியை முனிந்த⋆
    பெருமைகொலோ செய்ததின்று⋆
பெருந் தடங்கண்ணி சுரும்புறு கோதை⋆
    பெருமையை நினைந்திலை பேசில்⋆
கருங்கடல் வண்ணா! கவுள் கொண்ட நீராம்⋆
    இவள் எனக் கருதுகின்றாயே (8)

நீரழல் வானாய் நெடு நிலம் காலாய்⋆
    நின்ற நின் நீர்மையை நினைந்தோ⋆
சீர் கெழு கோதை என்னலதிலள் என்று⋆
    அன்னதோர் தேற்றன்மை தானோ⋆
பார்கெழு பவ்வத்தார் அமுதனைய⋆
    பாவையைப் பாவம் செய்தேனுக்கு⋆
ஆர் அழல் ஓம்பும் அந்தணன் தோட்டமாக⋆
    நின் மனத்து வைத்தாயே (9)

‡வேட்டத்தைக் கருதாதடியிணை வணங்கி⋆
    மெய்ம்மை நின்றெம் பெருமானை⋆
வாள் திறல் தானை மங்கையர் தலைவன்⋆
    மான வேல் கலியன் வாய் ஒலிகள்⋆
தோட்டலர் பைந்தார்ச் சுடர் முடியானைப்⋆
    பழ மொழியால் பணிந்துரைத்த⋆
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச்⋆
    சித்தமும் திருவொடு மிகுமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com